මැතිවරණ කොමිෂන් සභාව
தேர்தல் ஆணைக்குழு
Election Commission
මැතිවරණ මහලේකම් කාර්යාලය, අංක.02 සරණ මාවත, රාජගිරිය, ශ්‍රී ලංකාව
தேர்தல்கள் செயலகம், இல.02 சரண மாவத்தை, இராஜகிரிய, இலங்கை
Elections Secretariat, No.02 Sarana Mawatha, Rajagiriya, Sri Lanka

මාධ්‍ය නිවේදනය
ஊடக அறிவித்தல்
MEDIA RELEASE

**ஊடக அறிவித்தல் இல: 2025/08** **2025.11.14**

## தேர்தல்கள் ஆணையாளர் நாயகத்தின் நியமனம் பற்றிய அறிவித்தல்

இலங்கை நிருவாக சேவை விசேட தர அலுவலர் ஒருவரான திரு. சமன் ஸ்ரீ ரத்நாயக்க அவர்கள் 2019.10.16 ஆம் திகதியிலிருந்து தேர்தல் ஆணைக்குழுவின் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் பதவியை வகித்து, உரிய அறுபது வயது நிறைவில் 2025.11.13 ஆம் திகதிய சேவைக்குப் பின்னர் அரச சேவையிலிருந்து ஓய்வுபெற்றார்.

இலங்கை நிருவாக சேவை விசேட தர அலுவலர் ஒருவரான திரு. ரசிக்க பீரிஸ் அவர்கள் 2025.11.14 ஆம் திகதி புதிய தேர்தல்கள் ஆணையாளர் நாயகமாக கடமைகளைப் பொறுப்பேற்றார் என்பதை இத்தால் அறிவிக்கின்றேன்.

1998 மார்ச் மாதம் 02 ஆம் திகதி இலங்கை நிருவாக சேவைக்கு நியமிக்கப்பட்டதை அடுத்து 1998 செப்டம்பர் மாதம் 15 ஆம் திகதி தேர்தல்கள் திணைக்களத்தின் உதவித் தேர்தல்கள் ஆணையாளர் ஒருவராக சேவையில் இணைந்துகொண்ட திரு. ரசிக்க பீரிஸ் அவர்கள், அதிலிருந்து உதவித் தேர்தல்கள் ஆணையாளர் ஒருவராகவும் பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் ஒருவராகவும் மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் ஒருவராகவும் தேர்தல்கள் திணைக்களத்திலும் தேர்தல் ஆணைக்குழுவிலும் தொடர்ச்சியாக 27 வருட காலம் சேவையாற்றிய ஒரு மூத்த பதவிநிலை அலுவலராவார்.

**ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க**
தவிசாளர், தேர்தல் ஆணைக்குழு
தேர்தல் ஆணைக்குழு சார்பாக